# குழித்துறை நகர்மன்றத்தின் 14-06-2022 செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) இந்நகராட்சியில் கீழ்கண்ட காலி பணியிடங்களை நிரப்புவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் அனுமதி கேட்டு கடிதம் அனுப்ப மன்றம் தீர்மானிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 01-04-2022 முதல் காலியிடம் |
| 2 | தட்டச்சர் | 01-02-2018 முதல் காலியிடம் |
| 3 | வருவாய் உதவியாளர் | 30-04-2022 முதல் காலியிடம் |
| 4 | வருவாய் உதவியாளர் | 23-05-2022 முதல் காலியிடம் |
| 5 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 01-07-2017 முதல் காலியிடம் |
| 6 | நீரேற்று நிலைய காவலர் | 26-07-2021 முதல் காலியிடம் |
| 7 | மின்கம்பி உதவியாளர் | 01-04-2014 முதல் காலியிடம் |
| 8 | தூய்மை பணியாளர் | 03-06-2016 முதல் காலியிடம் |
| 9 | தூய்மை பணியாளர் | 01-07-2016 முதல் காலியிடம் |
| 10 | தூய்மை பணியாளர் | 01-07-2016 முதல் காலியிடம் |
| 11 | தூய்மை பணியாளர் | 01-06-2017 முதல் காலியிடம் |
| 12 | தூய்மை பணியாளர் | 01-07-2018 முதல் காலியிடம் |
| 13 | தூய்மை பணியாளர் | 01-06-2019 முதல் காலியிடம் |
| 14 | தூய்மை பணியாளர் | 14-03-2020 முதல் காலியிடம் |
| 15 | தூய்மை பணியாளர் | 14-03-2020 முதல் காலியிடம் |
| 16 | தூய்மை பணியாளர் | 09-04-2022 முதல் காலியிடம் |
| 17 | தூய்மை பணியாளர் | 13-05-2022 முதல் காலியிடம் |

மன்றத்தீர்மான எண். 129 - தீர்மானிக்கப்பட்டது.

2) வெட்டுவெந்நி மீன் சந்தை அருகில் போர்வெல் அமைத்து சின்டெக்ஸ் டாங்கு வைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 130 -தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.1

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 03-06-2022 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பழைய கடை எண்.11 | | | | |
| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலவைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் | ஏற்கனவே உரிமம் வழங்கப்பட்ட மாத வாடகை தொகைரூ. |
| (i) | பென்லி,<br>பென்காட்டேஜ்,<br>கல்லுகட்டி | 100000 | 2700 | 5000 |
| (ii) | சிவா,<br>கழுவன்திட்டை,<br>குழித்துறை | 100000 | 2500 | 5000 |
| 2. பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண்.G1 | | | | |
| (i) | அருண்ராஜ்,<br>வெட்டுவெந்நி,<br>மார்த்தாண்டம் | 100000 | 7100 | 8000 |
| (ii) | செல்வதாஸ்,<br>கரவிளாகம்,<br>மார்த்தாண்டம் | 100000 | 6200 | 8000 |
| 3. பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண்.G8 | | | | |
| (i) | முகமது முஸாபர்,<br>அழகிய மண்டபம்,<br>முளகுமூடு | 100000 | 6000 | 7700 |
| (ii) | சீராஜிதீன்,தக்கலை | 100000 | 5500 | 7700 |
| 4. பி.பி.முனுசாமி வணிகவளாக கடை எண்.G9 | | | | |
| (i) | முகமது முஸாபர்,<br>அழகிய மண்டபம்,<br>முளகுமூடு. | 100000 | 6000 | 7500 |
| (ii) | சீராஜிதீன்,தக்கலை | 100000 | 5500 | 7500 |
| 5. குழித்துறை வணிகவளாக கடை எண்.4 | | | | |
| (i) | ஆஷா காட்லின், | 100000 | 5100 | கடை தொடர்ந்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொற்றாடை,<br>குழித்துறை | | | ஏலம்<br>போகவில்லை |
| (ii) | ஜோயல்சிங்,<br>கொற்றாடை,குழித்துறை | 100000 | 4700 | - |
| 6. | மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடை எண்.A4 | | | |
| (i) | ஜெயசிங்,<br>கோணம், விரிகோடு | 100000 | 5200 | 10600 |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் உரிமம் வழங்குதல் குறித்து முடிவு செய்யலாம்.

அ.கு.:- 1) பெறப்பட்ட அனைத்து ஒப்பந்த புள்ளிகளும் கடந்தாண்டு குத்தகை தொகையினை விட குறைவாக உள்ளது.

2) 2021-2022 நிதியாண்டில் சுமார் 20 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் முன்வராத நிலையில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு வரிசை எண்.1 முதல் 5 வரையிலான இனங்கள் மீது பெறப்பட்ட மாத வாடகை தொகையினை ஒப்புக்கொள்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம். மேலும் வரிசை எண்.6-க்கு மறுஏலம் கோரலாம்.

**ந.க.எண்.**3066/2021/அ2.

மன்றத்தீர்மான எண். 131- 1முதல் 5 வரை ஒப்புக்கொள்ளப்பட்டது. வரிசை எண்.6 மறுஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்டவாறு செலவினப்பட்டியல்கள் பெறப்பட்டுள்ளது.

1) 9-3-2022 **தினமணி** Express Publication Rs.26145/-
2) 22-3-2022 **தினத்தந்தி** The Daily Thanthi Rs.22365/-
3) 1-4-2022 **தினத்தந்தி** The Daily Thanthi Rs.29820/-
4) 21-4-2022 **தினகரன்** Kal Publication Rs.17186/-

மேற்படி நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகைகளை சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**3066/2021/அ2.

மன்றத்தீர்மான எண். 132- அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண். 3

97-வது வாவுபலி பொருட்காட்சிக்கான பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 8-6-2022 அன்று கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | வைப்புத் தொகை ரூபாய் | மின் வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | G. சுரேஷ்,<br>த/பெ. குணசேகரன்,<br>147, 2-வது தெரு, தேனி-625531 | 40,00,000 | 10,00,000 | 1,17,00,000 |
| 2 | K. தங்கத்துரை,<br>த/பெ. கருத்தையா,<br>வீரபாண்டி, தேனி மாவட்டம் | 40,00,000 | 10,00,000 | 1,16,00,000 |
| 3 | M. பால்ராஜ்,<br>த/பெ. மாணிக்கம்,<br>படப்பறை, குழித்துறை | 40,00,000 | 10,00,000 | 1,21,00,000 |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், வரிசை எண்.3-ல் கண்டுள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(94-வது வாவுபலி பொருட்காட்சி (2019-ம் வருடம்) ரூ.1,15,10,000/- உரிமம் ஒப்பு கொள்ளப்பட்டது)

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**1400/2021/அ2

மன்றத்தீர்மான எண். 133- அனுமதிக்கப்பட்டது

## பொருள் எண். 4

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனமான மார்த்தாண்டம் நவீன மீன் சந்தை துறை ரீதியாக வசூல் செய்யப்பட்டு வருவதால் வசூல் செய்வதற்கான இரசீது புத்தகங்கள் அச்சடித்த வகைக்கு கன்யா பிரிண்டிங் அச்சகம், படந்தாலுமூடு என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.30,500/-க்கான செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**366/2021/அ2

மன்றத்தீர்மான எண். 134 - அனுமதிக்கப்பட்டது

## பொருள் எண். 5

குழித்துறை நகராட்சி ஆணையர் அலுவலக பணிகள் நிமித்தம் வெளியூர் பயணம் செய்யும் பொழுது பயணப்படி வழங்குவதற்காக 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2414/2018/பி1.

மன்றத்தீர்மான எண். 135 - அனுமதிக்கப்பட்டது

## பொருள் எண். 6

பொது சுகாதாரப்பிரிவில் வீடு வீடாக சென்று பிரித்து வாங்கப்படும் உலர் மற்றும் ஈரக்கழிவுகளின் அளவு குறித்து பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த குப்பைகளின் அளவுகளை துல்லியமாக அளந்திட நகராட்சி நுண்ணுயிர் உரமாக்கும் மையத்திற்கு எடை பார்க்கும் இயந்திரம் தேவைப்படுகிறது. எனவே ஒரு எடை பார்க்கும் இயந்திரம் வாங்க உத்தேச செலவு ரூ.20,000/- (இருபதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1727/2022/H1.
மன்றத்தீர்மான எண். 136 - அனுமதிக்கப்பட்டது

## பொருள் எண். 7

இந்நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணி செய்யும் திரு.P. ஜெயராஜன் கீழேகண்ட பணிகளுக்கு செலுத்தியுள்ள EMD தொகையை திருப்பி வழங்க கேட்டு விண்ணப்பம் செய்துள்ளார்.

ஒப்பந்தகாரர் செய்த பணி விவரம்

| வ. எண். | வேலை விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | EMD ரூபாய் |
|---|---|---|---|
| 1 | கழுவன் திட்டை சாலையில் ஒட்டுபணி செய்தல் | 1.50 | 1500 |
| 2 | பந்நியணி சாலையில் ஒட்டுபணி செய்தல் | 3.25 | 3250 |
| 3 | கொடுங்குளம் சாலையில் ஒட்டுபணி செய்தல் | 4.00 | 4000 |

| | | | |
|---|---|---|---|
| 4 | இடவிளாகம் சாலை ஒட்டுபணி செய்தல் | 4.75 | 4750 |
| 5 | பழைய எம்.எஸ். சாலை மற்றும் பாலவிளை சாலை ஒட்டுபணி செய்தல் | 6.00 | 6000 |
| 6 | குழித்துறை ஆர்.சி.தெருவில் Cover slab அமைத்தல் | 9.60 | 9600 |
| | மொத்தம் | | 29100 |

வ.எண். 1 முதல் 5 வரையிலான பணிகளுக்கு உட்பட்ட தொகை ரூ.29100/- காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளதால் திருப்பி வழங்க மன்றம் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2883/2021/பி1..
மன்றத்தீர்மான எண். 137 - அனுமதிக்கப்பட்டது

## பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட ஞாறான்விளை பிரதான சாலை தேவன்விளை சந்திப்பில் மழைநீர் வடிகாலில் அடைப்பு ஏற்பட்டு கழிவுகள் சாலையில் வடிந்து வருவதால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட வடிகால் பழுதினை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.65,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1715/2022/இ1.
மன்றத்தீர்மான எண். 138 - அனுமதிக்கப்பட்டது

## பொருள் எண். 9

குழித்துறை நகராட்சி வார்டு எண்.6-ல் அமைந்துள்ள சிவன்கோயில் சாலையில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளது. தற்சமயம், அவ்விடத்தில் வாவுபலி பொருட்காட்சி நடைபெற இருப்பதால் மேற்கண்ட மழைநீர் வடிகால் பணியினை அவசரம் அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இப்பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1714/2022/இ1.
மன்றத்தீர்மான எண். 139 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 10

2022-2023 நிதியாண்டிற்கு நகராட்சி பராமரிப்பில் உள்ள சாலைகளை புதுப்பிக்கும் பணிகளுக்காக திட்ட அறிக்கையை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.9326/2021/இ1, நாள் 23-04-2022-ன்மூலம் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி சாலைகளை தனித்தனியாக கலர் அமைத்து வரைபடம் தயாரிக்கவும் சாலைகளின் யூனிக்கோடு (Unicode) மற்றும் சாலைகளின் பெயர்களை வரைபடத்தில் குறிக்கவும் தெரிவிக்கப்பட்டதின் பேரில் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.43,000/- DE PORRES ASSOCIAES DESIGNERS & CONTRACTORS என்ற நிறுவனம் மூலம் செய்து முடித்தமைக்கும், அந்நிறுவனத்திற்கு பட்டியல் தொகையினை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.951/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 140 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சியில் CSR CORPORATE SOCIAL RESPONSIBILITY FUNDS-ல் பணிகள் மேற்கொள்ள Ministery of Corporate affairs-ல் பதிவு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.12087/2022/SBM, நாள் 11-05-2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.1540/2015/B2-ன் மூலம் அறிவுறுத்தப்பட்டது. அதன்பேரில் Ministery of Corporate affairs -ல் பதிவு செய்ய பதிவு கட்டணம் ரூ.5000 உத்தேச மதிப்பீடு ஆகும். அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1117/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 141 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13-ல் கண்ணக்கோடு சிங்கிளேயர் சாலை பராமரிப்பு பணிக்கென ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக்குழு மான்யம் 2021-2022-ன் கீழ் பணி நடைபெறவுள்ளது. தற்பொழுது சாலையில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் சாலையில் வடிந்து செல்கின்றது. அதனால் சுகாதாரகேடும் விளைகின்றது. எனவே சாலை பணியின் அவசியம் கருதி சாலையின் குறுக்கே சிறுபாலம் மற்றும் தடுப்பு சுவர் அமைக்க ரூ.3.30 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1728/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 142 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 13</u>

தமிழக அரசின் முதல் ஆண்டு சாதனைகனள தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

1) தமிழ் முரசு Kal Publications - Rs.9975/-
2) தினகரன் Kal Publications - Rs.9975/-
3) மாலைமலர் Malar Publications - Rs.9912/-
4) தினத்தந்தி Daily Thanthi - Rs.9840/-

மேற்கண்ட பட்டியல் தொகையினை வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்க

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண். 143 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 14

குழித்துறை நகராட்சியில் அரசு திட்டப்பணிகளின் கீழ் சாலைப்பணிகள் நடைபெற்று வருவதால் சாலை அமைக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் கட்டுமான பொருட்களை தர ஆய்வு செய்ய கீழ்கண்ட பொருட்கள் வாங்க வேண்டியுள்ளது,

1) 18” Ø Test Sieves - 33 Nos.
2) Bitumen Extractor - 1 Nos.

மேற்கண்ட தடவாள பொருட்கள் வாங்கிட உத்தேச மதிப்பீடு ரூ.52000/- ஆகும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1711/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 144 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 15

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் TN.74Z4605 - கு 2021-2022-ம் ஆண்டிற்கான தகுதி சான்று 19-04-2022 அன்றுடன் முடிவடைந்தது. 2022-2023-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்யும் பொருட்டு வாகனம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.64,562/- வரப்பெற்றுள்ளது. மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1055/2013/இ1.

மன்றத்தீர்மான எண். 145 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் பகுதியிலுள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்தில் 20 HP Stredder Machine Cum Pulverizer இயந்திரம் வாங்கி பொருத்துதல் பணிக்கு 07-06-2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு ( % ) |
|---|---|---|
| 1 | திரு.M. ஜாண்சன் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.T. அமிர்தராஜ் | 0.04% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.M. ஜாண்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**1485/2021/இ1.

மன்றத்தீர்மான எண். 146 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Mini Mast Light பொருத்துவதற்கு நமக்கு நாமே திட்டம் 2021-2022-ன் கீழ் நகராட்சி அலுவலக வளாகம் மற்றும் குழித்துறை மேட்டு கிராமம் சிவன்கோயில் அருகில் 6 Nos. 150W LED Fitting கொண்ட 12 மீட்டர் உயர் கோபுர மின் விளக்கு அமைக்கும் பணிக்கு 07-06-2022 அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ. எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு ( % ) |
|---|---|---|
| 1 | திரு. ஜஸ்டின்குமார் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.டி. பிரேம்குமார் | 0.06% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு. ஜஸ்டின்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**2606/2021/இ1.

மன்றத்தீர்மான எண். 147 - அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.